RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் இனவரைவியல்

**கி. புவனேஸ்வரி [அ] ***

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி - 32., இந்தியா,

# Ethnography in Rajam Krishnan's Novels

**K. Bhuvaneswari [a, *]**

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy – 32, India

*Corresponding Author: bhuvanacwc@gmail.com

Received: 05-12-2025
Revised: 22-02-2026
Accepted: 10-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Among the writers who strengthened the tradition of fieldwork-based writing in Tamil literature, Rajam Krishnan occupies a significant place. The vivid documentation of social life, the labour, culture, belief systems, and the socio-economic oppression of communities through direct live experiences stands as the distinctive feature of her novels. This study examines the ethnographic elements found in Rajam Krishnan's novels as its primary area of investigation. The novels Manudaththin Magarandhangal, Karippu Manigal, Kurinchiththen, and Kootu Kunchugal are taken as the primary sources for this research. The study aims to analyse the life of Devadasi women, the labour of salt-pan workers, the struggles of the Baduga tribal community, and the work burdens of labourers employed in match factories are ethnographically recorded in these novels. Furthermore, this research explores how the ethnographic tradition of Tamil literature, originating from Tholkappiyam, Sangam literature and other classical works, continues in the modern period through Rajam Krishnan's fieldwork-oriented novels.

**Keywords:** Raajam Manudaththin Magarandhangal, Karippu Manigal, Kurinjiththen, Koottu Kunjugal, Modern Literature.

## முன்னுரை

ஆய்வு என்பது உண்மையைத் தேடும் அறிவு செயல்பாடாகும். அந்த ஆய்வின் வேராக விளங்குவது கள ஆய்வாகும். சமூகத்தின் உயிர்ப்புள்ள வாழ்வியல் மற்றும் நவீன இலக்கியத்தில் சமூக எதார்த்தத்தை ஆழமாக பதிவு செய்த எழுத்தாளர்களுள் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். பெண்கள், காதல் கதைகளும் குடும்ப கதைகளும் படித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் நேரடியாக களத்திற்கு சென்று தகவல் திரட்டிப் புதினங்களை எழுதியவர்.

அவரது படைப்புகள் கற்பனையின் வெளிப்பாடாக அல்லாமல் வாழ்வில் நேரடி அனுபவங்களை ஆவணங்களாக பதிவு செய்துள்ளார். அதற்கு காரணமாக அமைவது அவர் மேற்கொண்ட ஆழமான கள ஆய்வு அனுபவங்களே ஆகும். இந்த கள ஆய்வு முறையே அவரது நாவல்களுக்கு இனவரைவியல் ஆழத்தையும் சமூக நம்பகத்தன்மையையும் வழங்கியது. இக்கட்டுரை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் நாவல்களில் காணப்படும் இனவரைவியல் கூறுகளை ஆய்வு நோக்கில் ஆராய்கிறது.

## இனவரைவியல்

இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட மனிதச் சமூகத்தின் வாழ்வியலை அவர்களின் இடத்திற்கே சென்று, அவர்களோடு வாழ்ந்து, அவர்களின் பார்வையில் இருந்து உலகைப் புரிந்து கொண்டு பதிவு செய்யும் ஒரு சமூக அறிவியல் ஆய்வு முறையாகும். இதனை பக்தவச்சல பாரதி அவர்கள் "ஒரு தனித்த சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி மானிடவியலாளர்கள் அச்சமூகத்தோடு நீண்ட

காலம் ஒன்றி வாழ்ந்து ஆய்வு செய்து அதனை எழுத்தில் எழுதி அளிக்கும் தனிவரைவு நூலே இனவரைவியல் எனப்படும்" (பக்தவத்சல பாரதி (2012) 'மானிடவியல் கோட்பாடுகள்') என்கிறார். ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பல்வேறு சமூக மக்களின் வாழ்வியலை கள ஆய்வின் மூலம், இனவரைவியல் நோக்கில் தம்முடைய படைப்புகளில் ஆவணப்படுத்துகிறார்.

## தமிழ் இலக்கிய மரபின் தொடர்ச்சி

தமிழ் இலக்கிய மரபில் இனவரைவியல் சிந்தனையின் தொடக்கம் தொல்காப்பிய காலத்திற்கு முன்பிருந்தே தொடர்கிறது. தொல்காப்பியம் இலக்கண நூலாக இருப்பினும், அகத்திணை, புறத்திணை, திணை அமைப்பு, ஒழுக்கக் கோட்பாடுகள் வழியாக சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தின் நிலம்-தொழில்-வாழ்வியல் உறவை மறைமுகமாக பதிவு செய்கிறது.

“திணைதோறும் மரபு நிலை திரிந்து இனத்தொடு பொருந்த இயலும் என்ப.”(தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, 2006 மரபியல் 88)

திணை அடிப்படையில் மக்களின் வாழ்வியல், மரபு, பண்பாடு ஆகியவற்றை வகைப்படுத்திய தொல்காப்பியரின் பார்வை, தமிழின் மரபு அடிப்படையிலான இனவரைவியல் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கியமான ஆற்றுப்படை நூல்களிலும் பாணர், பொருநர், கூத்தர், புலவர் போன்றோரின் வாழ்வியல் அமைப்பு, உணவு முறை, தொழில், விருந்தோம்பல் ஆகியவை சித்தரிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் பல இன மக்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதாக பல செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தொல்காப்பியம் சமூக வாழ்விற்கு விதிகளை வகுத்ததால், சங்க இலக்கியமும் அதனைத் தொடர்ந்த இலக்கியங்களும் அவற்றை மனித அனுபவங்களாகக் காட்சிப்படுத்துகிறது.

இத்தகைய இனவரைவியல் மரபின் தொடர்ச்சி நவீன காலத்தில் ராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் கள ஆய்வின் அடிப்படையில் தொடர்கிறது. மானுடத்தின் மகரந்தங்கள், கரிப்பு மணிகள், குறிஞ்சித்தேன், கூட்டுக் குஞ்சுகள், போன்ற படைப்புகளில் அம்மக்களின் வாழ்வாதாரம், உழைப்பு, சமூக ஒடுக்குமுறை, பண்பாட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றை வருணனைகளாக அல்லாமல் நேரடி அனுபவ ஆவணங்களாகப் பதிவு செய்கிறார்.

## இராஜம் கிருஷ்ணனின் கள ஆய்வுச் சிறப்பு

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தனது நாவல்களில் விளிம்பு நிலை மக்களை மையப்படுத்துகிறார். தேவதாசிப் பெண்கள், உப்பளத் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள் போன்றோர் அவரது கதைகளின் மையப் பாத்திரங்களாகின்றனர். அவர்களின் வாழ்வியல் சிக்கல்கள், சமூக ஒடுக்குமுறைகள் இயல்பாக சித்தரிக்கப்படுகின்றன. இதனால் அவரது நாவல்கள் சமூக ஆய்வுத் தன்மை பெறுகின்றன. இதனால் அவர் வெறும் ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாமல் சமூக ஆய்வாளராகவும் கருதப்படுகிறார். இளங்கோவடிகள் தன் காப்பியத்திற்குள் பல அரிய செய்திகளை ஆவணப்படுத்தியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வரிபாடல்கள் ஆகும். (கானல் வரி, ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, வேட்டுவவரி). அக்காலத்தில் இப்படியான இனவரைவியல் செய்திகளை திரட்ட இளங்கோவடிகள் கள ஆய்வு செய்திருக்க வேண்டும், அதற்கான சான்றுகள் நம்மிடம் இல்லை. ஆனால் இராஜம் கிருஷ்ணன் அவர்களின் கள ஆய்வுப் பணிக்கு அவர் படைத்த ஒவ்வொரு நூலும் சான்றாகும். அவர்களின் படைப்புகளைச் சான்றாக கருதுவதைக் காட்டிலும் வரலாற்றுப் பெட்டகமாக போற்றுதல் சிறப்பு. இராஜம் கிருஷ்ணன் அவர்கள் “உண்மை நிகழ்ச்சிகளின் ஆதாரம் கொண்டு, வாழ்வின் போக்குகளையும் சமூக சார்புகளையும் கணித்து, நிகழ்காலப் பிரச்சனைகளைப்பற்றிச் சிந்திப்பதும், ஆக்கபூர்வமான முடிவுகளை ஆராய்வதும் எனது இலக்கிய நோக்கம் என்றால் தவறில்லை” (மானுடத்தின் மகரந்தங்கள் (1984), இராஜம் கிருஷ்ணன்) என்று கூறியுள்ளார்.

## மானுடத்தின் மகரந்தங்கள் இனவரைவியல் பதிவு

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் கள ஆய்வினை நாவல்களுக்கு மட்டுமல்லாமல் வாழ்க்கை வரலாறு எழுதுவதற்கும் மேற்கொண்டுள்ளார். கள ஆய்வு செய்து பல செய்திகளைத் திரட்டியுள்ளார். அப்படி கள ஆய்வு செய்த போது ஒரு தேவதாசிப் பெண்ணை சந்திக்க நேர்ந்தது. பாரதியார் அப்பெண்ணைச் சந்தித்த போது “தங்கச்சி நீ இந்த வாழ்வை விடுத்து நேரான குடும்ப வாழ்வு வாழவேண்டும்” (மானுடத்தின் மகரந்தங்கள்(1984), இராஜம் கிருஷ்ணன்) என்று அறிவுரை வழங்கியதை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் அறிய நேர்ந்தது. இந்த நிகழ்வே தன்னுடைய மானுடத்தின் மகரந்தகள் என்ற நாவலின் கருவாக அமைத்துள்ளார்.

தேவதாசி இனத்தாரின் சூழலை, வாழ்க்கை முறையை படம்பிடித்துக் காட்டுவதாக இந்நாவல் அமைந்துள்ளது. மதுராம்பாளாக வரும் கதாநாயகி தேவதாசி குலத்தைச் சார்ந்தவளாகவும், விடுதலைப்போராட்ட வீரரை மணந்து கொண்டு இரண்டு குழந்தைகளுக்கு தாயானாள். தேவதாசி வாழ்க்கையை உதறிய அப்பெண் புகுந்த வீட்டாரின் இகழ்ச்சிக்கு ஆளாகிறாள், அவருடைய, பேத்தி பேபி நடனம் கற்று சினிமா ஹீரோயின் ஆக விரும்பும் பொழுது “சினிமாங்கறது நடிக்கிற உலகம். அது பொய்போலதான். எப்போதும் உண்மையா இருக்கும் அறிவுக்கும் மதிப்புக்கும் நீ ஆசை படனும்” (மானுடத்தின் மகரந்தங்கள்,(1984) இராஜம் கிருஷ்ணன்) என்று அறிவுரை கூறுகிறார். சமூகம் தேவதாசி முறையிலிருந்து விடுபட்ட பெண்களுக்கு உரிய மரியாதை வழங்காத நிலைக்கு விமர்சனமாக இந்நாவல் அமைந்துள்ளது எனலாம். தேவதாசிகள் குறித்த அக்காலகட்ட இனவரைவியல் செய்தியாகவும் இது பார்க்கப்படுகிறது. பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக விளங்குவது மட்டுமல்லாமல் பெண்களுக்கும் அடிமையாக இருக்கும் வருத்தத்தை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

## கரிப்பு மணிகளில் சமூக - வரலாற்று சூழல்

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் கரிப்பு மணிகள் நாவலை எழுதுவதற்கு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ‘பனஞ்சோலை அளம்’ என்ற இடத்தில் உப்பளத் தொழிலாளர்களிடையே தங்கி, அவர்களின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து பதிவு செய்துள்ளார். இந்த நாவல் சிறந்த எழுத்தாளரும் திறனாய்வாளரும் ஆகிய மதிப்புக்குரிய திரு.சிட்டி (சுந்தரராஜன்) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தொடங்கப்பட்டது.(கரிப்பு மணிகள் ஏழாம் பதிப்பு 2005 இராஜம் கிருஷ்ணன்) கள ஆய்வு என்பது, நேரடியாக சென்று, மக்களோடு மக்களாக கலந்து உணர்ந்து செய்யக்கூடிய ஆய்வு எனலாம். சில இனத்தார்களின் வரலாற்றை இலக்கியங்கள் பதிவு செய்யாமலே விட்டுள்ளன. விடுபட்ட அவ்வினத்தாரை தேடி ஆராய்ந்து இவர் பதிவு செய்த விதம் இளங்கோவடிகளின் வரிப்பாடல்களை ஒத்துள்ளது.

“உப்பு அளங்களை அணுஅணுவாய் அளந்து, அங்கே உலவும் நெஞ்சங்களை உணர்ந்து, இயற்கையின் சீற்றங்களோடு இயைந்து, ஏற்றங்களைப் போற்றிப் படைத்திருக்கிறார் ஆசிரியர். புதிய வேட்கையோடு எல்லாப் பக்கங்களையும் அறிந்து கொள்ளும்படி கதை தொய்வின்றிச் செல்கிறது.” (திட்டம் 25.6.1979, மன்னர் மன்னன்). ஆற்றுப்படையில் கூட கலைஞர்களின் வாழ்க்கை தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. இராஜம் கிருஷ்ணன் போன்ற எழுத்தாளர்கள், விடுபட்டுப் போன வரலாறுகளையெல்லாம் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். குறைந்த விலையில் கிடைக்கும் உப்பு நம் உணவினை சுவையூட்டும், உப்பு காய்ச்சும் தொழிலாளர்களின் வாழ்க்கையை அது சுவையூட்டியதாக தெரியவில்லை. அவர்கள் சிந்திய வியர்வையும் கண்ணீரும் தான் உப்பின் சுவைக்கு காரணமோ என்று தோன்றும் அளவிற்கு அவர்களின் வாழ்க்கை அவலங்களைச் சித்தரித்துள்ளார். முதலாளிகள் தொழிலாளர்களை நேரடியாக கூட சந்திக்காத வர்க்க பேதம், கங்காணிகள், கணக்குப் பிள்ளைகள் வழியாக நடத்தப்படும் நியாயமற்ற நிர்வாகம். தொழிலாளிகளின் சம்பளத்தை அவர்கள் செய்யும் சிறு சிறு தவறுகளுக்கு அபராதமாக பிடித்துக்கொள்ளுதல், பெண்களுக்கு பாலியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகள் என பலவற்றை இந்நாவல் பேசுகிறது.

## குறிஞ்சித்தேன்

நீலகிரிமலையில் வசிக்கும் படகர் இன மக்கள் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டுள்ள முதல் தமிழ்நாவல் குறிஞ்சித்தேன். பழங்குடியோரின் பழமையான மரபுகள் மற்றும் 1960 களில் இந்திய சமூக மாற்றங்கள் இக்கதையின் சாரமாக அமைகின்றன. குறிஞ்சித்தேன் நாவல் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புதினம். இயற்கை இந்த மக்களின் வாழ்வில் ஒரு பகுதியாக அல்லாமல் அவர்களின் அடையாளமாகவே அமைந்துள்ளது என்பதையும், தேன் எடுக்கும் தொழில், கிழங்கு சேகரித்தல், இயற்கையுடன் இணைந்த உணவு முறைகள் என அவர்களின் வாழ்வியலை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது. சிறுவர்களுக்கு திருமண வயது வரும் வரை காட்டுக் கோயிலில் இருந்து அங்கு வருபவர்கள் கொடுக்கும் பால், பழம் மற்றும் தானே சமைத்த உணவை ஒரு வேளை மட்டும் உண்ணுதல் வேண்டும் என்ற சடங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. உருண்டைக்கல் தூக்கி போட்டியில் வெற்றி பெறுபவர்க்கு பெண்ணைத் திருமணம் செய்ய முடியும் என்ற சடங்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரவில் ஆமணக்கு எண்ணெய் ஊற்றிய விளக்கு இல்லை என்றால் நிலம் விளையாது, மாடு மடி கறக்காது என்ற நம்பிக்கை, பால் கறந்து பெரிய பானையில் ஊற்றும் போது பெண்கள் குறுக்கே வரக்கூடாது, காட்டுக்குறும்பரின் மாயமந்திரத்தை நம்புவது, புனித நெருப்பைக் காப்பாற்றுபவன் ஆடம்பர சுகபோகங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும் நெருப்பைக் காப்பவன் ஒரே முறை சமைத்துண்ண வேண்டும் என்பதும் சட்டியை ஒரே தரம்தான் கவிழ்க்க வேண்டும் என்பதும் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கைகளாக ஆசிரியர் கூறிச் செல்கிறார். மலைவாழ்

மக்களின் வாழ்க்கை முறையையும் அவர்களின் அன்றாட வழக்கங்களையும் மிகத் துல்லியமாக எடுத்துரைக்கிறது. இச்சிறப்பிற்கு ராஜம் கிருஷ்ணன் அவர்களின் கள ஆய்வே காரணமாகும்.

## கூட்டுக் குஞ்சுகள்

கூட்டுக் குஞ்சுகள் என்பது சிறுவர் தொழிலாளர் சூழலை மையமாகக் கொண்ட சமூக நாவல். இதில் வறுமை காலத்தில், விவசாயம் நின்றுவிட்ட மாதங்களில், குடும்ப உணவுத் தேவைக்காக பெரியவர்களுடன் குழந்தைகளும் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை செய்திட அனுப்பப்படுகிறார்கள் என்ற நிலை சித்தரிக்கப்படுகிறது. குறைந்த நீர் மற்றும் வறட்சி காரணமாக விவசாய தொழில்கள் தடைபட்டு, பலர் தொழிற்சாலைகளுக்குச் செல்லும் தருணத்தை எழுதுவதற்கு எழுத்தாளர் சம்பந்தப்பட்ட சமூகத்திற்குள் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.. தீப்பெட்டிகளில் குச்சிகளை அடைப்பதைப் போல் குழந்தைகளின் வாழ்க்கையைக் கல்வியை அடைப்பது நியாயமற்ற செயல் என்று இக்கதையில் வரும் விஜி எதிர்க்கிறாள். மேலும் காலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குழந்தைகளை வேலை வாங்கும் முதலாளிகள், அவர்களுக்கு சரியான ஊதியம் கூட தருவதில்லை போன்ற செய்திகள் அங்கே நிகழும் அவலங்களை நமக்கு காட்சிப்படுத்துகிறது. ஆசிரியர் இக்கதையில் வரும் குழந்தைகளின் தோற்றத்தினை எடுத்துக் கூறுகையில் "அரைச்சராய் சட்டைகள், அழுக்கு கிழிசல்கள், தோள்பட்டை நழுவும் கவுன்கள், பாவாடைகள், பிரிந்துவிழும் முடிகள், உலகத்துச் சிருஷ்டி இரகசியங்கள் புரிந்து விட்டதால் ஏற்பட்ட நாண முகிழ்ப்புக்களில் அடங்கிவிட்ட கவடில்லா முகங்கள், துடுக்கத்தனங்களை அமுக்கிக் கொண்டு அச்சம் மருவிக் கிடக்கும் சாயல்கள், என்று பளிச்சென்று தெரியாத பல வண்ணங்கள். சோர்வும் அலுப்புமான கரங்களில் கோக்கப்பட்ட உயிர்த்துவம் மங்கிய புள்ளிகள். கைகளை அலங்கரிக்கும் அலுமினியம் தூக்குகள்; சிறு தகரடப்பிகள்." (கூட்டுக் குஞ்சுகள் 1980 பாரிப் புத்தகப் பண்ணை) என்று வர்ணனை நீளுகிறது. மனதை உருக்கும் ஓவியமாக இவ்வருணனை அமைகின்றது.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தன் நாவல்களின் மூலம் பல்வேறு இன மக்களின் இனவரைவியலை அதாவது அம்மக்களின் வாழ்க்கை முறையினை ஆவணப்படுத்தியுள்ளார். இவர் பதிவு செய்துள்ள செய்திகள் அவ்வின மக்களின் வரலாறு என்று போற்றப்படக்கூடிய சிறப்பினைப் பெற்றுள்ளது. அடுத்ததாக பெண்களுக்கு எதிரான சமூகச் சிக்கல்களை மிகத் தெளிவாக காட்சிப்படுத்தியுள்ளார். அவரது படைப்புகள் இலக்கிய இன்பத்தைத் தாண்டி சமூக ஆய்விற்கான ஆதாரங்களாக விளங்குகின்றன. எனவே, இராஜம் கிருஷ்ணனின் நாவல்கள் தமிழிலக்கியத்தில் இனவரைவியல் அடிப்படையிலான முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன.

## References


Tholkappiyam, Porulathikaram, Saradha Publishers, 2006.

Silappadhigaram- Thanjai Tamil university, (1985)

Manudaththin Magaranthangal, First Edition, 1984, Raajam Krishnan, Paari Puththaga Pannai.

Karippu Manigal, Seventh Edition, 2005, Raajam Krishnan, Thaagam.

Bakthavatchala Bharathi, Second Edition, 2012, Maanudaviyal Kotpaadugal, Adaiyaalam Publishers.

Kootuk kunjugal, First Edition, 980, Paari Puththaga Pannai.

Kurinjiththen, First Edition, 2020, Sri Senpaga Publishers.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License